செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 31 நாள்: 20-1-2017

மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்-9.
நாள்: 20.01.2017

**பத்திரிக்கைச் செய்தி**

வேலூர் மாவட்டத்தில் ஆதார் அட்டைக்கு புகைப்படம் எடுத்தல் பணியினை தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் வாயிலாக நிரந்தர சேர்க்கை மையங்களில்(PEC) நடைபெற்று வருகிறது. நிரந்தர சேர்க்கை மையங்களில் நடைபெறும் புதிய ஆதார் பதிவிற்கு கட்டணம் ஏதும் கிடையாது. இது ஒரு கட்டணம் இல்லா சேவையாகும். ஆனால் சில தனி நபர்கள் / சில அமைப்புகள் விரைவாக ஆதார் எண் பெற்றுத்தருவதாகக்கூறி பொது மக்களிடம் பணம் வசூலிப்பதாகத் தெரிய வந்துள்ளது. பொதுமக்களை ஏமாற்றும் இத்தகைய நபர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்க இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI) வழிமுறைகளை வகுத்துள்ளது. இந்த வழிமுறைகளின்படி, பொது மக்களிடம் கட்டணம் வசூலிக்கும் நபர்களிடமிருந்து ரு.10,000/- வரை அபராதமாக வசூலிக்கவும், ஓராண்டு வரை சிறை தண்டனை விதிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் ஆதார் எண்ணை பெற தமிழக அரசு நிறுவனங்களால் மாநகராட்சி அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், நகராடசி மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட நிரந்தர சேர்க்கை மையங்களான (e-சேவை மையங்களை) அணுகி பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஆதார் பதிவிற்கு ஏதேனும் தனியார் நிறுவனம் கட்டணம் வசூலித்து வருவதாக தெரியவந்தால் அந்தந்த வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு/மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு புகார் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விபரங்களுக்கு:
திரு. விஜயகுமார்
தனி வட்டாட்சியர் (தேர்தல்)
செல் - 9442409914

செ.ம.தொ.அ.
வேலூர்- 9.